IV.—POINTS OF INFORMATION *RE* HOLIDAY ON 10TH MAY 1957 FOR THE CENTENARY OF THE WAR OF INDEPENDENCE OF 1857.

SRI S. PAKKIRISAMI PILLAI : On a point of information, Sir, இந்த மாதம் 10-ம் தேதி விடுதலை இயக்கத்தின் நூற்றுண்டு விழாக் கொண்டாடப்படுவதால், அந்த தினத்தை விடுமுறையாக விடுவதற்கு ஏதாவது உத்தேசமிருக்கிறதா என்பதை கனம் அமைச்சர் அவர்களிட மிருந்து அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நூற்றுண்டு விழாக் கொண்டாடுவதை வருகிற ஆகஸ்ட் 15, 16 தேதிகளில் வைத்திருக்கிறோம். இந்த ஒரு நாள் விடுமுறைக்குப் பதிலாக, அப்பொழுது ஆகஸ்ட் 15, 16 ஆகிய இரண்டு தினங்களையும் விடுமுறையாக விட்டு, இந்த நூற்றுண்டு விழாவை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுவதற்கு உத்தேசித்திருக் கிறோம். எதற்கு வேண்டுமானாலும் விடுமுறை விடலாம். ஆனால் 10-ம் தேதி விடுமுறை விட்டால், இந்த விழாவைக் கொண்டாட முடியாது. ஆகஸ்ட் 15, 16 தேதிகளில் இந்த நூற்றுண்டு விழாவை நல்ல முறையில் கொண்டாடுவதற்கு எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துழைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

V.—PROGRAMME OF BUSINESS FOR THE NEXT SITTING OF THE HOUSE.

SRI M. KALYANASUNDARAM : இன்று இந்த சபை ஒத்திவைக்கப் படுமென்று அங்கத்தினர்கள் எதிர்பார்க்கிறார்கள். எல்லா அலுவல்களும் முடிந்துவிடும் என்று நினைக்கிறேன். அடுத்த பட்ஜெட் கூட்டம் எப்பொழுது நடைபெறும், எவ்வளவு நாட்கள் தொடர்ந்து நடக்கும் என்பதை சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், அதற்குத் தகுந்தபடி அங்கத்தினர்கள் தங்களுடைய அலுவல்களை நிர்ணயித்துக்கொள்ளமுடி யும். ஆகவே அடுத்த கூட்டம் எப்பொழுது ஆரம்பமாகும் என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தேதி நிர்ணயம் செய்யப்படாமல் தான் இன்று சபை ஒத்தி வைக்கப்பட வேண்டுமென்று நினைக்கிறேன். திரும்பவும் ஜூன் மாதம் 24-ம் தேதியன்று கூடி, சில சட்டங்களை நிறைவேற்றவேண்டியிருப்பதால், முதல் 4 அல்லது 5 நாட்களில் அந்தச் சட்டங்களை நிறைவேற்றிவிட்டு, அதன் பிறகு ஜூன் 29-ம் தேதியன்று வரவு செலவுத் திட்டத்தை இந்த சபை முன் சமர்ப்பித்து ஜூலை 1-ம் தேதியி லிருந்து அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாமென்று நினைக்கிறேன். எவ்வளவு நாட்கள் பொது விவாதம் நடைபெறவேண்டும், மான்யக் கோரிக் கைகள் மீது எவ்வளவு நாட்கள் விவாதம் நடக்கவேண்டும் என்பதைப் பற்றிக் கட்சித் தலைவர்கள் என்ன அபிப்பிராயப்படுகிறார்களோ, அதன் படி நடப்பதற்கு நான் தயாராய் இருக்கிறேன். இரண்டு, மூன்று நாட்கள் என்று ஒதுக்கி வைத்துவிட்டு, பிறகு " எனக்குப் பேச அவகாசம் கொடுக்க வில்லை " என்ற புகாருக்கு இடமில்லாமல், எவ்வளவு நாட்கள் விவாதம் நடக்கவேண்டுமென்று கட்சித் தலைவர்கள் சொல்லுகிறார்களோ அதன்படி ஒதுக்கிவைத்து விவாதத்தை விரிவான முறையில் நடத்துவதற்கு நான் தயாராய் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொது விவாதத்திற்கு ஐந்து நாட்களையும், மான்யக் கோரிக்கைகளின் மீது நடக்கும் விவாதத்திற்கு 12 அல்லது 13 நாட்களை ஒதுக்கிவிட்டால், எல்லா அங்கத்தினர்களும் பங்கு எடுத்துக் கொள்வதற்குப் போதிய சந்தர்ப்பம் கிடைக்குமென்று நான் நினைக்கிறேன். இதை எல்லாம் Business Advisory Committee-ல் எல்லா கட்சித் தலைவர்களும் ஆலோசித்து ஒரு முடிவுக்குவந்தால், அந்த முடிவை ஏற்றுக்கொண்டு பின்னர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து கொள்ளலாம். இப்பொழுது உள்ள நிலையிலே ஜூன் மாதம் 24-ம் தேதி கூடி ஜூலை 20-ம் தேதி வரையில் தொடர்ந்து சபை நடக்கலாமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

SRI K. VINAYAKAM : On a point of information, Sir.

POINT OF INFORMATION *re* (1) HOLDING THE NEXT SITTINGS OF THE LEGISLATURE AT OOTACAMUND.

MR. SPEAKER : Is it about the same subject? If so the point has already been raised and a reply has been given by the Hon. the Leader of the House.

SRI K. VINAYAKAM : It is about another matter, Sir. In view of the Budget session falling in the mid-summer is there any proposal to hold the sittings of the Assembly in Ootacamund where there will be congenial surroundings.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜூன் மாதக் கடைசியில் ஊட்டிக்குப் போவதாயிருந்தால் அங்கத்தினர்கள் ஒருவரும் அங்கு தங்குவதற்கு விரும்பமாட்டார்கள். அப்பொழுது அங்கு காற்றும் மழையுமாக இருக்கும். போனநேரத்திலேயே திரும்பிவிடவேண்டுமென்று அங்கத்தினர்கள் புரட்சி செய்ய ஆரம்பித்து விடுவார்கள் என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஜூன் முடிவில் அல்லது ஜூலை மாதத்தில் ஊட்டிக்கோ அல்லது கொடைக்கானலுக்கோ போகும் யோசனையை யாரும் சொல்லமாட்டார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் விநாயகம் அவர்கள் தெரிந்து கொள்வதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டார்கள் என்று நினைக்கிறேன்.

(2) HOURS OF SITTINGS OF THE LEGISLATIVE ASSEMBLY.

SRI K. ANBAZHAGAN : ஓர் விவரம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த சமயம் நல்ல கோடைக்காலமாக இருப்பதால் காலை 11 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் சபையின் நடவடிக்கைகளை நடத்துதற்குப் பதிலாக, காலை 9 மணியிலிருந்து சபையை அமைச்சர்களுக்கும் அங்கத்தினர்களுக்கும் ஏற்ற முறையில் நடத்தினால், அவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். 11 30 a.m. குளிர்ந்த நேரத்தில் சபையை நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Business Advisory Committee எந்த யோசனையைச் சொன்னாலும் அதன் பிரகாரம் நடந்து கொள்வதற்கு நான் தயாராயிருக்கிறேன்.

VI.—ANNOUNCEMENTS BY HON. SPEAKER.

(1) ELECTION OF MEMBERS TO THE HOUSE COMMITTEE.

MR. SPEAKER : I have to announce to the House that the following fourteen Members were duly nominated for the election of eleven Members of the Madras Legislative Assembly to the House Committee :—

1 Srimathi Dr. Sathivanimuthu.
2 Sri V. K. Kothandaraman.
3 ,, T. Veluchami.
4 ,, B. Doraisamy Reddiar.
5 ,, D. S. Authimoolam.
6 ,, K. R. Nallasivam.
7 ,, K. S. G. Haja Shariff.
8 Srimathi C. Kolandai Ammal.
9 Sri K. S. Arthanareswara Gounder.
10 ,, C. Muthiah Pillai.